ஓம்

தருமசீலன்.

"அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு."

(All Rights Reserved.)

புத்தகம் 5	துந்துபி௵ தை௴ 1923௵ ஜனவரி௴	சஞ்சிகை. 10

நீதிச் செய்யுட் சிந்தாமணி.

நல்லோர்க்கு வெற்றியும் தீயோர்க்குத் தோல்வியும் நேரு மெனல்.

"நல்லவை புரியு மாந்தர் நாந்தகம் பிழைத்து வீழா
அல்லவை புரியு மாந்தர்க் கத்திர மொன்றும் வாயா
வெல்வதோ குணத்தின் மிக்கார் வெற்றிலை விடினும் வேலாம்
இல்லையே வென்றி தீமை யிடங்கொண்ட மனத்தி னார்க்கே."

(இ-ள்.) "ஒருவரையொருவர் வெல்லுந்தன்மை எங்ஙனமெனில், தமக்குத் தீங்குகளைப் புரிவார்க்கு நன்மைகளைச் செய்வார், கையிற்கொண்ட வாளாயுதமானது பகைவர்மேற் செலுத்துங்காலத்து அவரை யொழிக்காமல் தவறி வீழாது; அவர்க்கு அதுவும்மிகையாம்; அந்த நற்குணத்தின் மிக்கவர்கள், வெற்றிலையைப் பகைவர்மீது எவினாலும் அது வேலாகிப்பாய்ந்து பகைவரைக் கொல்லும். தீமை இடங்கொண்ட மனத்தினார்க்கு, கரத்தில் அஸ்திரங்கள் அமைந்தாலும் அவற்றுள் ஓரம்பேனும் பகைவர்மீது பாய்ந்து பயனளிக்காது. (விடும் அம்புகளெல்லாம் தவறிப்போம்.) ஆதலால் அத்தீயோர்க்கு ஒருபோதும் வெற்றியே இல்லை" என்பதாம்.

(வி-ரை.) தீங்கு செய்வார்க்கும் நலமே புரியும் உத்தம குணத்தினார் கையிற்பிடித்த வாளானது பகைவரை வெல்வதில் தவறமாட்டாது. அவர்க்கு இங்ஙனம் ஆயுதப்பயன் கூறுதலே மிகையாம்; அவர்கள் ஆயுதமின்றி வெற்றிலையைப் பகைவர்மீது விடினும் அது வேலாகி அவரை யொழித்துவிடும். தீயோர்க்கு அஸ்திரமிருப்பினும் பயன்படாது. அது நாசமாய் அவர்க்குத் தோல்வியே உண்டாகும். இதனால் உத்தமர்க்கு எவ்வகையிலும் வெற்றியே யுண்டாகுமென்பதும், தீயோர்க்குத் தோல்வியே நேருமென்பதும் பெறப்படும். அல்லவை புரியுமாந்தர்க்கு நல்லவை புரியுமாந்தர் என மாற்றுக. குணத்தின் மிக்காரென்பது நல்லவை புரியுமாந்தர்க்கு வேறொரு பெயர்; அது சுட்டு. வாயாது என்பது துவ்வீகுதிகுன்றி நின்றது. வெல்வதோ-என்பது, 'வெல்வ தெங்ஙனமெனிற் கூறுதும்' என ஆசிரியர் கூற்றாக விரித்தற்கிடனாயிற்றலின், இசை யெச்சத்தின்பாற் படும். இசை யெச்சமாவது-வாக்கியங்களில் அவ்வவ்விடத்திற்கேற்ப ஒரு சொல்லும் பல சொல்லும் வருவித்துரைக்கப்படுவது. இச்சொல் வெல்வது இத்தன்மைத் தென்பதை, விரித்தலாற் றெளிவுறுத்தி நிற்றலின் இதனீற் றேகாரம் தெரிநிலைப் பொருளின் பாற்படும்.

(சீவகசிந்தாமணி 815.)

தருமசீலன்.

துந்துபிஹூ தைமீ.

"கைப்பொருள் தன்னின் மெய்ப்பொருள் கல்வி"

இதன் பொருள் :—"கைப்பொருள் தன்னின் - ஒருவனுக்குக் கைவசப்பட்டிருக்கும் மண் பொன் இரத்தினம் முதலிய பல் வகைப் பட்ட பொருள்களில், மெய்ப்பொருள்-உண்மைப் பொருளாவது, கல்வி-நூற்படிப்பாம்" என்பதாம்.

மனிதர்க்கு மண், பொன், இரத்தினம், மக்கட்பேறு, கல்வி முதலியவைகளெல்லாம் தேடிக் கைவசப்படுத்தக் கூடிய பொருள் களாம். எனினும், இவற்றுள் நிலைபெறுவதும், நிலையற்றனவு மென இருவகைப்படும்; மண், பொன்முதலியன வெல்லாம் அழிந்து போகக் கூடியவை. கல்வியோ என்று மழியாமல் நின்று இருமைக் கும் துணைபுரியக்கூடியது. எங்ஙனமெனில், ஒருவன், பல சாஸ் திரங்களையும் ஐயமறக் கற்றுக்கொள்வானாயின், அக்கல்வியின் உதவி கொண்டு அநேகம் நூற்களைச் செய்வான்; அவை உலக முள்ளவரை யிலும் நிலைபெற்றிருக்கும். இன்னும் அக்கல்வியாளன், கலைஞானத் தால் அநேக தானதருமங்களையும் தவங்களையும் செய்து உலகத் தில் புகழை நிலை நாட்டித் தேகத்தை நீத்தபின் நற்கதியையும் அடைவான். அவன் பெயர் உலகில் என்றும் நிலைபெற்றிருக்கும். இங்ஙனம் பல நிலைத்த காரியங்களையெல்லாம் கல்வி உண்டாக்கு வதால் அது, பொருள்களுக்குள் உண்மைப் பொருளெனப்பட்டது. இதுபற்றியே திறக்குறளாசிரியரும்,

"கேடில் விழுச்செல்வங் கல்வி யொருவற்கு
மாடல்ல மற்றை யவை."

என்றார். ஆதலின், மானிடராயினோர், மற்றைய பொருள்களைத் தேடும் விஷயத்தில் உழைப்பெடுத்துக் கொள்வதைக் காட்டினும்,

எம்மைக்கும் இன்பம் பயக்கும் உண்மைப் பொருளாகிய கல்விப் பொருளைத் தேட முயல்வாராக.

(திருவருட்சகாயம்.)

தாய்மொழியை வளர்த்தல்.

(முன்தொடர்ச்சி புத்தகம்-5, சஞ்சிகை-9, பக்கம்-213)

வளர்த்தற்குரியவர்.

ஒரு மொழியை வளர்க்க வேண்டுமாயின், அதற்கு அம்மொழியாளராகிய அரசர் முதல் மக்கள் (பொதுஜனங்கள்) ஈறாகப் பலரும் அவர் அவர்களுடைய அறிவு ஆற்றல்களுக்குத் தக்கவாறு உண்மையாக உள்ளன்புடன் உறுதியோடு உழைக்க முன்வரல் வேண்டும். இம்முறையில் நம்து தாய்மொழியோ அத்தகைய பெரும்பாக்கியத்தைத் தற்காலம் பெற்றிருப்பதாகத் தோன்றவில்லை. எங்ஙனமெனில், உள்ள ஓர் அரசரும் "ராஜீய கலவரங்களை முன்னிட்டும், சொந்த விஷயத்தை உத்தேசித்தும் நான் நிரந்தரமாக இந்தியாவிற்கு வெளியே வசிக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டுவிட்டதென்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன்." எனத் தம்முடைய குடிமக்களுக்கு ஓர் அறிக்கையைச் செய்துவிட்டுத் தமது நாட்டில் இருந்து வாழ்வதையும் வெறுத்து வேற்று நாட்டிலேயே தங்கி வாழ்ந்து வருகிறார்; அவரது ஆட்சியோ அங்கிலமயமாகவே நடைபெறுகின்றது; அங்கே தமிழ்வாடை வீசுகின்றதோ என்பதும் ஐயுறவேண்டியிருக்கின்றது. அன்றியும், நாம் அந்தத் தமிழொரு வேந்தராற் பிரதிகாவலராக நியமிக்கப்பெற்ற நமது தமிழர் பெருமானால் நமது தாய்மொழியாகத் தண்டமிழ் மொழியின் வளர்ச்சிக்கு எத்தகைய உதவி கிடைக்கப் போகின்றது என எதிர் நோக்கவேண்டிய நிலைமையிலுமிருக்கின்றோம். ஜமீந்தாரர்களோ வழக்கம்போலக் களியாட்டங்களிலும், பிறபலவேண்டாத விநோதங்களிலுமே பொழுது போக்குகின்றவர்களாய் இருக்கின்றார்கள். மடாதிபதிகளைப் பற்றியோ கூறவேண்டியதில்லை. அவர்கள், தாங்கள் எழுந்தருளி அலங்காரம் பண்ணும் மடங்கள் சமயவளர்ச்சிக்கும், மொழியின் வளர்ச்சிக்கும் என்றே நிலையிடப்பெற்றன என்பதை முற்றும் மறந்து நிற்கின்றார்கள். பொருளாளர்களோ எங்ஙனம் தங்களது பொருளை முன்னிலும் அதிகமாகப் பெருக்கிக் கொள்ளலாம் என்பதிலேயே கண்ணையும் கருத்தையும் செலுத்தி

வருகின்றார்கள். தர்மஸ்தாபனங்களோ பெரும்பாலும் பொருளாசைகொண்ட அப்பொருளாளர்களது மேற்பார்வையிலேயே இருந்து வருகின்றன. ஆதலின், அவற்றைப்பற்றியும் நாம் கவலைப்படுதல் பயன்தருவதாகாது. இவற்றால், அடியேன் முற்கூறியது தவறாகாதென்க. என்றாலும், நமது மொழியை வளர்த்தற்கு உரியவர் இல்லாமற் போகவில்லை. வேறு பலரும் இருக்கின்றனர்; பலஸ்தாபனங்களும் இருக்கின்றன. அவைதாம் மக்கள், (பொதுஜனங்கள்), அவர்களுள் ஒருவகையினராகிய புலவர்கள், பெரும்பாலும் அவர்களாலேயே நடத்தப்படும் கழகங்கள், ஸ்தலசுயஆட்சி ஸ்தாபனங்கள், துரைத்தனம் ஆதிய ஆகும்.

எங்ஙனம் வளர்த்தல்வேண்டும்.

இம்முறையில், எவர் எவர், எவை எவை, எப்படி எப்படி நமது மொழியை வளர்த்துவால் வேண்டும் என்பதே இனிக் குறிப்பிடப்படல் வேண்டும்.

(அ) மக்கள்.

நமது தமிழ்மொழியைத் தாய்மொழியாகப் பெற்றவர்கள் சற்றேறக்குறைய இருகோடியினர் ஆவார்கள் என்பது முன்னர்க்கூறப்பட்டது. இன்னணம் இருந்தும், நமதுமொழி வளரவேண்டிய நிலைமையில் இருக்கின்றது. என்செய்வது? இனியேனும், 'அவர்கள்-பொதுவாக ஒவ்வொருவரும், சிறப்பாக உயர்தரப்படிப்பைப் படித்துப் பட்டம் பெற்றவர்களும்-தாம் தாம் தமது மொழியாளராகிய பிற உடன்பிறப்பாளருடன் பேசும்போதெல்லாம் தடுக்கமுடியாத நிலைமை உண்டானாலன்றி எக்காரணம் கொண்டும் தாய்மொழியால் அன்றிப் பிறமொழிகளாற் பேசிக்கொள்ளுதல் கூடாது' என்ற உறுதிப்பாடு உள்ளவர்களாக இருத்தல்வேணடும்; இங்கு அன்னார், "அங்கிலப் பார்லிமெண்டு சபையிலே இந்தியா உதவி மந்திரியாராயிருந்த கனம் லின்ஹாப்பிரபு அவர்களும், இந்தியா மந்திரி சபையிலே ஓர் உறுப்பினராயிருக்கும் கனம். பூபேந்திர நாதவஸு அவர்களும் லண்டன்மா நகரத்திலும் தாங்கள் தனித்துப் பேசிக்கொள்வதாயின் அங்கில மொழியிற் பேசிக்கொள்ளாது தங்களது தாய் மொழியிலேதான் பேசிக்கொள்வார்கள்" என்று கேட்கப்படுவதை ஊன்றியறிதல் பொருத்தமானது. அன்றியும், அவர்கள், தமது தாய்மொழியை அறிந்தவர்களிடத்தில் அதை விடுத்துப் பிறமொழிகளாற் பேசுவதைப் பரவச்செயலாகவும் கருதல்

வேண்டும்; மேலும், ஆண்டாண்டுள்ள மொழிப்பற்றுடையார் அனை வரும் முன்னர்த் தாங்கள் நடந்து காட்டிப் பிறரையும் அங் ஙனமே நடந்துகொள்ளுமாறு திருத்திவரல் வேண்டும்; "இச்சபை யில் எனது தாய்மொழியாகிய தமிழிலே என்னால் பேசமுடியா மைக்கும், தெரியாமைக்கும் நான் வருந்துகின்றேன்" என்று அதனை யும் வேற்றுமொழியாற் கூறுவதைப் பெருமையாக நினைப்பது தவறு என்பதையும், அது வெட்ககரமானது என்பதையும் உணரல் வேண்டும்; 'தாம் பிரசங்கமாரி பொழிந்து அறிவுறுத்த வேண்டிய வர்கள் எந்த மொழியை இயல்பில் அறிந்திருக்கின்றார்களோ அந்த மொழியிலேயே பொழிந்தால்தான் அந்தப் பிரசங்கம் குறித்தபயனை அளிக்கும்' என்பதை அடியேன் அவர்க்கு வற்புறுத்திக் கூற வேண்டியதில்லை. இங்கு, அவர், "முன்னர்த் தம்து தாய்மொழி (வங்காளமொழி)யிலே செய்யுளை இயற்றி, அதைத்தான் பின்னர்த் தமமால் அங்கிலத்தில் மொழிபெயர்க்க முடியும்" என்று நமது (இந்தியக்) கவியரசர் ரவீந்திரநாததாகோர் கூறுவதன் உட்கருத்தை உற்று நோக்கற்பாலர். இன்னும், அன்னார், ஒருநாடு ஒற்றுமை யுற்று முன்னேறும் வண்ணம் துணைபுரிவதற்கு அந்த நாட்டு மொழியின் வளர்ச்சியே பெரிதும் இன்றியமையாத தொன்றாம் என் பதனையும் தமது கருத்திற் பதிய வைத்துக் கோடல்வேண்டும். இதற்கு மேற்கோளாக 'ஒருநாடு முன்னேற வேண்டுமாயின், உதி ரம், உடல் முழுவதும் ஓடிப்பரவுதல்போல், அந்நாட்டுப் பெரியோர் களின் கருத்துக்கள், அந்தநாட்டு மக்கட் பரப்பு முழுவதும் ஓடிப் பரவுதல் வேண்டும். ஆனால், அவை, அவர் அவர்களின் தாய் மொழித் துணையாலேதான் அங்ஙனம் ஓடிப்பரவமுடியும்" என்று டாக்டர் பி. ஜே. மேதா அவர்கள் கூறுவது நம்மனோரால் ஊன்றி அறியத்தக்கதாம். இவற்றால், தமிழராவார் ஒவ்வொருவரும் 'தன் கையே தனக்கு உதவி' என்ற உறுதியுரையை உணர்ந்து தத்தம் உரை செல்லுமிடங்களிலெல்லாம் நமது மொழியின் வளர்ச்சிக்கு இன்றியமையாத பலதுறைகளிலும் முயன்று வரல்வேண்டும் என் பதும், 'அவர் செய்யவேண்டும்; இவர் செய்யவேண்டும்' என்று வாய்ப்பேச்சுப் பேசிக்கொண்டு வாளா நாள்கழித்தல் கூடாது என் பதும் பெறப்படுகின்றன. இங்கே, தாய் மொழியை வளர்க்க வேண் டியதன் இன்றியமையாமையை வற்புறுத்துங்கால் "மத்திய ஐரோப் பாவிலும் கீழ் ஐரோப்பாவிலும் உள்ள யூதர்கள் தங்களுக்குள் ஒரே பாஷை உபயோகிக்கப் படவேண்டும் என்ற கருத்துடன் தாங்கள்

பேசும் ஆபாச இட்டிஷ் பாஷையை ஒரு நாகரிக பாஷையாகச் செய்து அதில் உலகத்திலிருக்கும் உத்தமமான கிரந்தங்களை எல்லாம் மொழிபெயர்த் திருக்கிறார்கள். அவர்களாற் கூட அன்னிய பாஷைகளின் மூலமாய்த் தங்கள் மனோபாவங்களைத் திருப்திசெய்து கொள்ள முடியவில்லை. தவிர, அந்த ஜாதியில் படித்திருந்த சிலர், எல்லா ஜனங்களும் அன்னிய பாஷையைக் கற்று அதன் மூலமாய் அறிவைப் பெறவேண்டுமென்று நினைக்கவில்லை. ஆகையால், அவர்கள், எல்லாராலும் ஆபாசபாஷை என்று கருதப்பட்ட தங்களது தாய்ப்பாஷையை நிரம்பவும் கஷ்டப்பட்டுச் சீர்ப்படுத்தி, சிரேஷ்டமான நூல்களையெல்லாம் அதில் மொழிப்பெயர்த்து அதைக் கௌரவப்படுத்தி யிருக்கிறார்கள். இது மிகவும் ஆச்சரியமான காரியம். இந்த ஒருதலை முறையிலேயே இந்தப்பாஷை மிகவும் உன்னத நிலைமைக்குத் தொண்டுவரப்பட்டிருக்கிறது. இப்பாஷை வெப்ஸ்டர்ஸ் அகாதியில் 'யூதர்களால் உபயோகப்படுத்தப்படும் ஓர் ஆபாச கலப்படபாஷை' என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனல், இப்பொழுது இந்தப் பாஷையானது இப்படித் தூஷிக்கப்பட்டால் ஐரோப்பாவில் இருக்கும் யூதர்களுக்குக் கோபம் உண்டாகும். இந்த யூதபண்டிதர்கள் ஒருதலை முறைக்குள் தங்களது ஆபாசபாஷையை உன்னத நிலைமைக்குக் கொண்டுவந் திருக்கும்பொழுது, நம்முடைய நாகரிகமடைந்த தேசபாஷைகளைச் சிறப்பிப்பது மிகவும் சுலபமான காரியம். தென்னுப்பிரிக்காவிலும் இதே மாதிரி நடந்திருக்கிறது" என்று மகாத்மா காந்தி அடிகளார் கூறியிருப்பது நம்மனோர்க்கு நமது மொழியை வளர்க்கத் தக்க போதிய ஊக்கத்தை அளிக்கும் என நம்புகின்றேன்.

(ஆ) புலவர்கள்.

இத்திருக்கூட்டத்தார் நமது தமிழ்மொழியைப்பற்றிச் சிறப்பித்து 'இஃது ஓர் உயர்தனிச் செம்மொழியாம். இதில எல்லா வளங்களும் நிறைந்துள்ளன' என்று கூறிக்கொண்டு காலத்திற் கேற்றவாறு வேண்டும் பலவற்றைச் சேர்த்துக் கோடற்கு முட்டுக் கட்டைகளாக இருந்துவருதல் கூடாது. சொற்களைப் புதுவதாகப் படைத்துக்கொள்வதற்கு ஆசிரியர் தொல்காப்பியனர் ஆணை தந்துள்ளார் என்பதை இவர்கள் அறிந்தே இருப்பார்கள் என்பது ஒருதலை. ஆதலின் அன்னர், நமது தண்டமிழை உலகவழக்கழிந்த, உயிரற்ற சில உயர்தனிச் செம்மொழிகளோடு ஒப்பிட்டுப் பெருமைப் படுத்த முயலலாகாது. ஆனல், அன்னர், நமது தாய்மொழியாம்

தண்டமிழை உலகவழக்கிலுள்ள, உயிர்த்திருக்கும் உயர்தனிச் செம்மொழி என்று கூறிச் சிறப்பிக்க முயலல்வேண்டும்.

(இ) கழகங்கள்.

இவை, ஆண்டிற்கொருமுறை கூட்டங்கூடிச் சில நூறு வெண்பொற்காசுகளைச் செலவுசெய்து ஆடம்பரத்துடன் பலர் ஒன்றுகூடிச் சிலர் சிலவற்றைப்பற்றிப் பேசிக் கலைவதாற் சிறிதும் பயன் விளைந்துவிடாது. ஆனால், அவை, அங்ஙனம் செய்வதையே தங்களது கடைமையை நிறைவேற்றியதாகக் கருதிவிடாது அதனினும் மேலாக மொழியின் வளர்ச்சிக்கெனப் பல துண்டுப் பிரசுரங்களை ஏராளமாய் வெளியிட்டு எவர்க்கும் இலவசத்தில் எளிதிற் கிட்டுமாறு செய்துவரல்; என்றும் நின்று நிலவக்கூடிய தகுதியினையுடையதும், சமயப்பகுதி கல்விப்பகுதி செல்வப்பகுதி சரிதப்பகுதி உழவுப்பகுதி கைத்தொழிற்பகுதி வியாபாரப்பகுதி அரசியற்பகுதி ஆகிய பலபகுதிகளையுடையதுமான சிலமாதாந்தச் செந்தமிழ்ப் பத்திரிகைகளைத் தக்க ஆராய்ச்சியாளர்களைக்கொண்டு எழுதுவித்து வெளியிட்டுவரல்; எளிய இனிய நடையிலுள்ள பல சிறந்த உரை நூல்களை வெளியிடல் ஆகிபவற்றையும் மேற்போட்டுக் கொள்ளல் வேண்டும். அன்றியும், அவை, பொருள்வருவாய் ஒன்றனையே குறிக்கொண்டு இவையிற்றை மேற்போட்டுக் கொள்ளலாகாது. தமிழ் மக்களது அறிவு வளர்ச்சி ஒன்றனையே குறிக்கொண்டு மேற்போட்டுக் கொள்ளல்வேண்டும். இத்தகைய அரிய செயல்களை மதுரைத்தமிழ்ச் சங்கத்தாரும், சென்னைத் தமிழர் கல்விச் சங்கத்தாரும் மேற்போட்டுக்கொண்டு செய்ய முன் வரலாம். இம்முறையில் உழைக்கத்தக்க வேறு பல கழகங்களும் உள. நிற்க, அவை அங்ஙனம் செய்ய முன்வருதல் மாத்திரம் போதியதாகாது. தமிழர்களும் அவற்றைப் பெரிதும் போற்றிவளர்த்து வாங்கிப்படித்துப் பயன்பெற முந்துறல்வேண்டும். இங்ஙனம், பலர் படித்தறிந்து கொள்ள முன் வருவாராயின், அத்தகைய ஆராய்ச்சி நிறைந்த இன்றியமையாத பல பத்திரிகைகளும், நூல்களும் வெளிவருவதும் இயலாததொரு காரியமன்று. தமிழ்மொழிமாட்டுப் பேரன்பு உண்டு என விருதுபேசிக்கொண்டு இருப்புக் கடலையைப்போலக் கடினமான நடையில் சிலவற்றை எழுதி இயற்கைக்கு மாறாக நடக்காமலும் இருக்கவேண்டும். சுற்றுப்பக்கங்களிலுள்ள ஊர்களுக்கு உறுப்பினர்களை அனுப்பி மொழியின் உயர்வையும், அதன் இன்றியமையாமையையும் விரித்துக் கூறுவித்தும் ஆங்காங்குக் கிளைக்கழ

கங்களை நிலையிடுவித்தும் வளர்த்துவர முயலல்வேண்டும். நாம் பேசுவது இன்னமொழி என்பதைக்கூட அறியாத பல தமிழ் மக்கள் இன்னும் நமது தமிழ் நாட்டில் பத்தாயிரக்கணக்கில் இருக்கின்றார்கள் என்பதை அடியேன் தாழ்மையுடன் அவற்றை நடத்துவோர்க்கு நினைப்பூட்டு கின்றேன்.

(ஈ) ஸ்தலசுய ஆட்சி ஸ்தாபனங்கள்.

நமது தமிழ்மொழியைத் தாய்மொழியாகக்கொண்ட ஸ்தலசுயஆட்சி ஸ்தாபனங்கள் நமதுநாட்டில் பல இருக்கின்றன. அவை அனைத்தும் முதலில் தங்களுடைய கடிதப்போக்குவரத்துக்களையும், ஏனைய நடபடிக்கைகளையும் நமது தாய்மொழியிலேயே செய்து வரல்வேண்டும். அன்றியும், அவை தத்தம் அதிகார எல்லைக்குட்பட்ட ஊர்களிலுள்ள எல்லாச் சிறுவர் சிறுமியர்களுக்கும் தாய்மொழியைப் பயிற்றுவிக்கத்தக்க பள்ளிக்கூடங்களைப் போதிய அளவு வைத்து நடத்திவருவதோடு பிறரால் நடத்தப்படும் அத்தகைய பள்ளிக்கூடங்களுக்கும் பொருள் முட்டுப்பாடு உண்டாகாமற் போதிய அளவு பொருளுதவிசெய்தும் வரல்வேண்டும். நிற்க அத்தகைய் பள்ளிக்கூடங்களை நிலையிட்டும் ஆதரித்தும் வருவதால் மாத்திரம் அவை தமது கடமையை நிறைவேற்றியன ஆகா. போதிய அளவு பிரசாரவேலைசெய்து பொது ஜனங்களைப் படித்துப் பயன் பெறுமாறு தூண்டுவதும் அவற்றின் கடமையாகும். ஏனெனில், அவற்றின் வருவாய் அனைத்தும் தமிழ் மக்களிடமிருந்தே பெறப்படுகின்றன. அன்றியும், அவற்றை நடத்துவோர் அடையும்பெருமை அனைத்தும் அவர்களைத் தங்களுடைய பிரதிநிதிகளாகத் தெரிந்தெடுத்த தமிழ் மக்களாலேயே தரப்படுகின்றன ஆதலின் என்க.

(உ) துரைத்தனம்.

நமது மொழியை வளர்த்தற்குற்ற உரிமையையும், கடமையையும், போதிய ஆற்றலையும் பெற்றிருப்பன சென்னை, இலங்கை ஆகிய இரண்டு துரைத்தனங்களும்; பெரும்பாலும் துரைத்தனத்தாலேயே நடத்தப்பெற்றுவரும் சென்னைச் சர்வ கலாசாலையுமேயாம். இவை, தமது கடமையை உணர்ந்து நமது மொழியை வளர்க்க முன்வருமாயின், அவற்றிற்கு அத்துறையில் அதிகத் தொல்லைகள் உண்டாகமாட்டா; நமது வேண்டுகோளும் இனிது நிறைவேற்றப் படலாம். அவை, முதலில் தம்முடைய அதிகார எல்லைகளுக்குட்பட்ட அனைத்து நடபடிக்கைகளையும் நமது தாய்மொழியாம் தண்ட

மிழ் மொழியிலேயே செய்துவரல் வேண்டும். இங்குத் தாங்கள் செய்யவேண்டிய அனைத்தும்,—வேண்டுகோள்களோ, கட்டளைகளோ, அறிவிப்புக்களோ,—தமிழ்மொழியைத் தாய்மொழியாகக் கொண்ட குடிமக்கள்களிடத்திலே தான் என்பதையும்; தங்களால் காக்கப்பட வேண்டியவர்களும், கற்பிக்கப்பட வேண்டியவர்களும் தமிழர்களே என்பதையும்; தங்களுக்கு வரும்பொருள்கள் அனைத்தும் தமிழர்கள் அரிதிலே தேடிக் கொடுப்பனவே என்பதையும்; தாங்கள் செய்யும் அதிகாரமும், அடையும் பெருமையும் தங்களைப் பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுத்த தமிழர்களாலேயே தங்களுக்குக் கிடைத்தன என்பதையும் அடியேன் அவற்றை நடத்துவோர்க்கு நினைப்பூட்ட வேண்டியதில்லை. இங்ஙனம் நடைபெறுதற்குத் தாய்மொழியைப் பயிலாது படித்துப் பட்டம் பெற்றுப் பட்டதாரிகள் எனப்பலரும் வெளிவரக்கூடியதாக இருக்கும் தற்காலக் கல்விமுறை முதலில் அடியோடு மாற்றப்படல் வேண்டும். உலகத்தில் நமது நாடு (இந்தியா) ஒன்றுதான் தாய்மொழியைப் பயிலாமல் பட்டதாரிகள் வெளிவரக்கூடிய நிலைமையில் உள்ள நாடாகும். இது பெரிதும் வருந்தத்தக்கதே. இத்தகைய இழிந்த நிலைமை எவ்வளவு விரைவில் நீக்கப்படுகின்றதோ அவ்வளவு விரைவில் நமது மொழியும், நாடும் முன்னேறும் என்பது தவறாகாது. இக்கருத்தே பல சான்றோர்க்கும் உடன்பாடாம். இம்மட்டோ தற்கால முறைமை? தாய்மொழிக்கு முதல் இடம் கொடுக்காததோடு தாய் மொழியைக் கற்றவர்களும் இழிந்தவர்களாகக் கருதப்படுகின்றார்கள். அந்தோ! வெட்கம்!! வெட்கம்!!! ஆதலின், அவை, உடனே, தற்காலக் கல்விமுறையை மாற்றித் ‘தாய்மொழியைப் பயிலாது பட்டதாரிகளாக இனி எவரும் வெளிவரமுடியாது’ என்ற கண்டிப்பான கட்டளையைச்செய்து கைக்கொள்ளல் வேண்டும். அன்றியும், அவை எங்கெங்கே தாய்மொழியை வளர்த்தற்குப் பாடுபடப் பொதுஜனங்கள் முன்னுக்கு வருகின்றார்களோ அங்கங்கெல்லாம் தங்களுடைய உத்தியோகஸ்தர்களை அனுப்பி அவர்களுக்கு ஊக்கமளித்துவர முயலுவதுடன் அவர்களது முயற்சிக்குப்போதிய அளவு பொருளுதவி செய்தும் வரல்வேண்டும். அதிகம் சொல்லுவானேன். அவை, அடியேன் முன்னே கூறியுள்ளவண்ணம் அனைத்து முயற்சிகளுக்கும் வெளிப்படையாக முன்வந்து அவற்றிற்குத் தக்கவாறு போதிய அளவு எல்லாத் துறைகளிலும் உதவிசெய்து வளர்த்து வரல்வேண்டும். மேலும், அவை ‘எத்தகைய அரிய உயரிய பிறமொழிக் கருத்

துக்களையும் தங்களுடைய குடிமக்களாகிய (எஜமானர்களாகிய) பொது ஜனங்கள் தங்கு தடையின்றித் தங்கள் தங்களது தாய் மொழியால் விரித்து விளக்கி உரைத்துக் கொள்ளும் தகுதியினையும், அறிவினையும், ஆற்றலினையும் பெற்றிருக்கின்றார்கள்' என்று பெருமைபேசிக் கொள்ளத்தக்க நிலைமை உண்டாவதே மிகமேலான ஆட்சியின் அறிகுறி என்பதையும் அறிந்து கொள்ளல்வேண்டும். இதுபற்றிக் கூறிக்கொண்டே போகலாம். எனினும், அடியேன் அங்ஙனம்கூற முன்வரவில்லை. ஆனால், 'ஒரு நாட்டின் அறிவு வளர்ச்சிக்கும், சமய வளர்ச்சிக்கும், ஆட்சிமுதலிய பிறவற்றின் வளர்ச்சிக்கும் துணை செய்வதற்கு அந்நாட்டினர் ஒவ்வொருவரும் "முதலில் தத்தம் தாய்மொழியையும், இரண்டாவதாகத் தத்தம் சமயச் சார்பான உயர்வையும் அறிவையும் வளர்க்கத்தக்க கருத்துக்கள் நிறைந்த மொழியையும், பின்னர் ஆட்சியாளரின் மொழியையும் கற்றல்வேண்டும்" என்று பலபெரியோர்களும் கூறுவது நம்மனோரால் உய்த்துணரத் தக்கது' என எடுத்துக்கூற அடியேனால் முன் வராதிருக்க முடியவில்லை. இக்கருத்துப்பட முன்னம் ஒருகால் மாட்சிமிக்க பரோடா அரசர் அவர்கள் கூறியதும் அடியேனது நினைவிற்கு வருகின்றது. இம்மூன்றும் ஒரே மொழியில் அமைந்துள்ள நாடுகளும் இருக்கின்றன. அத்தகைய நாடுதான் விரைவில் முன்னேறக் கூடியதும். நமது நாடும் ஒருகால் அத்தகைய உயரிய மேலான நிலைமையில் இருந்ததே. நமது தாய்மொழியும் அம்மூன்றையும் ஒருசேரக் கொண்டுள்ளதே. என்செய்வது! தற்பொழுது சிறிதும் ஆற்றலற்றிருக்கின்றோம்! எனினும், இத்தகைய நிலைமை எந்நாட்டிலும், எப்பொழுதும் நிலைத்திருக்க முடியாதாதலின் நமது மொழியும் விரைவில் விடுதலைபெறும் என்பது ஒருதலை. அதற்கு இற்றைக்கூட்டமே ஓர் ஒப்பற்ற அறிகுறியாம். இங்கு நமது பிரதிநிதிகளிற் சிலர் "எதனையும் சொல்லலாம்; எதும் செய்தல் எளிதன்று" என்று கூறி அடியேனது கருத்தை மறுக்கப் பார்க்கலாம். ஆனால், அடியேன் அதற்கு அன்னாரை நோக்கி, "மரியாதைக்குரிய ஐயன்மீர், தாங்கள் சொல்லும் கருத்தடங்கிய குறட்பாவை அடியேன் அறிவேன்; எனினும், 'எண்ணுந்தோறும் மேன்மையையே எண்ணல்வேண்டும்; 'பெரியோர் செய்தற்கரிய காரியங்களையே செய்வர்' என்றுள்ள கருத்துக்களடங்கிய குறட்பாக்களையும்; 'மனமிருந்தால் வழி பிறக்கும்' என்றுவரும் பழமொழியையும் தாங்கள் தயை செய்து பன்முறையும் ஊன்றி யறியுங்கள்; அப்பால் அடியேனது

கருத்தை மறுத்துரையுங்கள்" எனத்தாழ்மையுடன் வேண்டிக்கொள்வதால் மீட்டும் அடியேனது கருத்தை நிலைநிறுத்த முயலுவேன். நிற்க, "பொறியின்மையார்க்கும் பழியன்று அறிவறிந்து—ஆள்வினை இன்மை பழி" என்ற பொய்யாமொழியையும் நினைப்பூட்டுவேன்.

போது.

இந்நிலையில், ஒரு சாரார் பிறமொழிகளிலுள்ள எல்லாக் கருத்துக்களையும் எளிதில் அறிவிக்கத்தக்க ஆற்றலுள்ள சொற்கள் தமிழ்மொழியில் இல்லை என்றும், பிறிதொருசாரார் பிறமொழிகளிலுள்ள எத்தகைய கருத்துக்களுக்கும் தமிழ்மொழியிற் சொற்களைப் படைத்துக்கொள்ளலாம் என்றும், வேறொரு சாரார் பிறமொழிகளிலுள்ள கருத்துக்கள் கலக்கப்படவேண்டுமாயின் அக்கருத்துக்களை அறிவிக்கும் அந்த அந்தப் பிறமொழிச் சொற்களை அப்படி அப்படியே நமது எழுத்துக்களால் எழுதிச் சேர்த்துக் கொள்ளலாம் என்றும், மற்றும் பலர் வேறு பலமாதிரியாகவும் மொழி பெயர்த்தலைப்பற்றிய கருத்துக்களை ஆங்காங்கு வெளியிட்டுள்ளார்; வெளியிட்டும் வருகின்றனர். இதுபற்றி ஒருவகை முடிவு விரைவில் ஏற்பட்டே தீரும். அதுவரையில் 'ஊருடன் கூடிவாழ்' என்றபடி நாமும் நமது வழியே செல்லவேண்டியது தான். அஃது எங்ஙனமாயினும் ஆகுக. எங்ஙனம் ஓடுகின்ற யாற்றுநீர் தன்னோடு கலக்கும் பிறவேற்று நீர்களைத் தடையின்றிச் சேர்த்துக்கொண்டு அவற்றைத் தன்னிறமேயாக்கிச் சிறிதும் தன்னியல்பினின்றும் வழுவாது பின்னரும் ஒழுகுகின்றதோ அங்ஙனமேதான் நமது தாய்மொழியாம் தண்டமிழும். எங்ஙனமெனில், நமது தமிழ்மொழி ஓடுகின்ற யாற்றுநீர்போலப் பேச்சு வழக்கில் உள்ள மொழிகளுள் ஒன்றாயுள்ளது. இது முன்னரும் கூறப்பட்டது. ஆதலின், இதனுள் வேற்று நீர்களைப்போன்ற பிறமொழிக் கருத்துக்கள் வந்து சேருவது இயல்பே. சேரவேண்டும் என்பதுதான் நமது விருப்பமும். அதுதான் மொழியின் வளர்ச்சியைப் பெருக்க வல்லதும். இங்ஙனமேதான் பிற பேச்சு வழக்கிலுள்ள மொழிகளும் வளர்ந்து வருகின்றன. இதற்கு உதாரணமாக அங்கிலம், ஜப்பான், வங்கம், ஆந்திரம் முதலிய நாட்டு மொழிகளைக் கூறலாம் என்க.

இனி, நமது மொழி இத்தகைய மாறுதலுக்குற்ற தகுதியினைப் போதிய அளவு பெற்றிருக்கின்றது என்பதை விளக்கலும் பொருத்

தமானதே. அதற்குத் தற்காலம் பல அறிஞர்களாலும் வெளியிடப்பெற்றுள்ள பலதிறப்பட்ட நூல்களையும் குறிப்பிடல் வேண்டும். அதனால் நமது தாய்மொழியாந் தண்டமிழ் காலத்திற்கேற்ற கருத்துக்களைத் தன்னகத்துக்கொள்ளுந் தகுதியினைப் பெற்றிருக்கின்றது என்பதும் உறுதியுறும். எனினும், இங்கு, அடியேன், அவையிற்றைக் குறிப்பேனாயின், அஃது ஒரு பெரிய அட்டவணையாக நீண்டு உங்களது உயிரினும் சிறந்த காலத்தை வீணாக்கும். ஆதலின், அதனைக் கூறாது விடுகிறேன்.

இங்கு "இங்ஙனம் வளர்ந்துவரும் மொழியை எங்ஙனம் தாழ்ந்த நிலைமையில் உள்ள மொழியாகக் கூறலாய்?" என ஒரு சிலர் கருதக்கூடும். ஆனால், அன்னார், தயைசெய்து சிறிது பொறுமையுடன் அடியேன் முற்கூறியாங்கு நமது நாட்டுப் பரப்பின் அளவையும், நமது மொழியைப் பேசும் மக்களது தொகையின் பெருக்கையும், பிற நாடுகளை நோக்க நமது நாடு இருக்கும் பிற்போக்கையும் ஊன்றி நோக்குவாராயின் அவர்க்குத் தவறாது அடியேன் கூறுவதன் உண்மை இனிது புலனாம். ஆகவே, நமது நாட்டின் முன்னேற்றத்திலும், மொழியின் வளர்ச்சியிலும் விருப்பமுள்ள ஒவ்வொருவரும் தம்மால் இயன்ற அளவு உண்மையுடன் உழைக்க முன்வரல் வேண்டும் என்பது பெறப்படுகின்றது.

நிற்க, ஒரு மொழியிலுள்ள அரியபெரிய கருத்துக்களைப் பிறிதொரு மொழியில் மொழி பெயர்த்தல் எளியதொரு வேலையன்று; அஃதொரு பொறுப்புடைய வேலையேயாம். அன்றியும், மொழி பெயர்ப்பதனால் அந்த அந்த மொழிகளுக்குள்ள இயற்கையான சிறப்புக்கள் கெடாதிருத்தலும் வேண்டும். 'ஒண்டவந்த பிடாரி ஊர்ப் பிடாரியை விரட்டிற்றும்' என்ற பழமொழிக் கிலக்காகப் புதுக் கருத்துக்கள் நுழைந்து மொழி பெயர்ப்பு மொழியின் பழைய பெருமைகளை மறைத்து விடாத நிலைமையிலும் அம் மொழி பெயர்ப்பு அமைதல்வேண்டும். மேலும், இங்ஙனம் மொழி பெயர்த்தல் முதலிய செய்தற்கோ தாம் மொழி பெயர்க்க முயலும் மொழிகளில் வல்லுநராகப் பலர் முன்வரல் வேண்டும். அன்னார் மிக்க பொறுமையாளராகவும், நடுநிலையாளராகவும், 'தந்நலத்தினும் நாட்டின் நலமே பெரிதாம்' என்ற கொள்கையினை உடையாராகவும், பொருள் முட்டுப்பாடு இல்லாதவராகவும் இருத்தல் வேண்டும். அன்றியும், அன்னார்க்கு உதவி புரியப் பலமொழிகளிலும் வல்ல பல

அறிவாளிகள் அடங்கிய ஒரு கழகமும், பொருளுதவி செய்யத் தக்க வசதிகளும் இருத்தல் வேண்டும்.

இங்ஙனம், தத்தம்மொழியிடத்துள்ள குறைபாட்டை உணர்ந்த மொழிப் பற்றுடையார் அனைவரும் 'என் செய்வது?' என்று எண்ணி மடிந்து வாளா இராது, அக்குறைபாட்டை "முயற்றின்மை இன்மை புகுத்தி விடும்" என்றபடி தமது முயற்சிக் குறைவினால் வந்தது எனக்கருதிப் பலர் ஒன்று சேர்ந்தும், தனித்தனியாகவும் இயன்ற அளவு ஒவ்வொரு துறையிலும் "முயற்சி திருவினையாக்கும்" என்றதைக் கடைப்பிடித்து ஊக்கத்துடனும், நம்பிக்கையுடனும் உறுதியாய் உழைக்க முன்வரல் வேண்டும். அங்ஙனம் முயன்றால் இக்குறைகள் மிக விரைவில் நீங்கி விடலாம். இங்கே, 'தமிழின் அபிவிருத்தி' என்ற தலைப்பின் கீழ் 'தமிழ் வரலாறு' என்ற ஆராய்ச்சி உரையில் அறிஞர், ஸ்ரீமான். ராவ்பகதூர் கே. சி. ஸ்ரீநிவாஸபிள்ளை அவர்கள் எழுதியுள்ள பகுதியும், "சேணிற் பறக்கின்ற செந்தமிழ்க் குதிரை முன்—கிட்டேது தட்டேது காண்" என்ற பழைய தொடர் மொழியும் ஊன்றியறியத் தக்கனவாம்.

என் வளர்த்தல்வேண்டும்.

உலகத்தில் மக்களாய்ப் பிறந்தார் எவரும் தமது நாட்டைத் தாழ்ந்த நிலைமையிற் பார்க்க உடன்படார். ஆனால், உயர்ந்த நிலைமையிற் பார்க்கவே விரும்புவர்; அதற்கான முயற்சியையும் இயன்ற அளவு செய்வர். ஒரு நாடு தாழ்ந்த நிலைமையிலிருந்து உயர்ந்த நிலைமையை அடைய வேண்டுமானால், அந்த நாட்டினரிடம் உண்மை, உறுதி, ஊக்கம், ஒற்றுமை, சமத்வம், தந்நயங்கருதாமை, தன் மதிப்பு, நடுநிலை, அஞ்சாமை, ஆண்மை முதலிய நறுங்குணங்கள் இருத்தல் வேண்டும். அத்தகைய நறுங்குணங்களோ எல்லோரிடத்திலும் எளிதில வந்தடையக் கூடியன அல்ல. அவை ஆய்ந்த கல்வி, நிறைந்த கேள்வி, தக்கார்களது சேர்க்கை முதலியவற்றால் ஒருவருக் குண்டாகலாம். இவற்றுள்ளும் முதன்மையானது கல்வியே.

இத்தகைய, அறம் பொருள் இன்பம் வீடு என்ற நாற்பெரும் பேறுகளையும் அளிக்கவல்ல, இன்றியமையாத கல்வியோ இளமையிலேயே கற்று வளர்த்துக்கொள்ள வேண்டியதாகின்றது. இளமைப்பருவத்திற் கற்பதற்கோ தாய்ப்பாலோடும், உதிரத்தோடும் கலந்து வளர்ந்துவருகிற அவர் அவர்களது தாய்மொழியே அன்றி, மிகமிகத் தேர்ச்சிபெற்ற அறிவாளர்களையும் 'எங்ஙனம் உச்சரிப்

பது பிழைபட்டதாகாது' என்று மயக்கவல்ல பிறமொழிகள் உயர்வுடையன ஆகா. அன்றியும், அவை, தாய்மொழிபால் அடையும் பயனைப்போன்ற அத்துணைச்சிறந்த பயனை எவர்க்கும் எளிதாகவும் விரைவாகவும் கொடா. எனவே, எத்தகைய கருத்துக்களையும் எவரும் எளிதாகவும், குறைந்தகால அளவிலும் அறிந்து கொள்வதற்கு அவர் அவர்களது தாய்மொழியே மேலான துணை செய்வதாகும் என்பது பெறப்படுகின்றது. பல அறிஞர்களது கருத்தும், உலக அனுபவமும் இஃதேயாம். "அறிவுடையார் எல்லாம் உடையர்" என்ற தேவர்வாக்கும் ஈண்டுச் சிந்தித்துணரற்பாலது.

வளர்க்காவிடில் வரும் இழுக்கு என்னை.

'இது வரையில் அடியேன் கூறியுள்ள குறைகள் நமது மொழிக்கு இழுக்கைத் தருவன அல்லவா?' என்று கேட்பதே இதற்குப் போதிய விடையை அளிக்கும் என்பது ஒருதலை. என்றாலும், "தாய்மொழியைப்போற்றி வளர்க்காதிருப்பது ஜாதீயத்தற்கொலையாகும்" என்று மகாத்மா காந்தி அடிகளார் கூறியதையும் இதற்குற்ற நல்லதொரு விடையாகக் கூற அடியேன் முன் வருகின்றேன். இஃதொரு பேரிழுக்கன்றே?

வளர்த்தலால் வரும் பயன் யாது.

இத்துணையும் கூறியது கொண்டே இவ்வினாவுக்குப் பொருந்திய விடையை அறிந்து கொள்ளக்கூடும். எனினும், அடியேனும் எடுத்துக் கொண்டதற் கேற்பச் சில சொல்லி நிறுத்துவேன். நமது மொழியைப்போலவே தற்காலத்திற்கு வேண்டும் பலவற்றையும் தன்னகத்துக் கொள்ளாக் குறையைப் பெற்றிருந்த வங்காள மொழி தன்னுடைய அன்பர்களால் தன்னிடமிருந்த அக்குறைகளினின்றும் நீங்கி இப்பொழுது நூல் வளத்தாலும், கருத்து நிறைவாலும், பிறவற்றாலும் குறைவுபடாத இந்திய மொழிகளில் ஒன்றாக விளங்குகின்றது. அம்மொழிக்குரிய வங்காளிகளாகிய நமது (இந்திய) சகோதரர்களோ அடியேன் முற் கூறியாங்கு முன்னேற முயலும் ஒரு நாட்டினரிடம் இருக்கவேண்டிய நறுங்குணங்கள் பலவற்றையும் பெற்றிருப்பதோடு கல்வி, செல்வம் என்ற இருபெரும்பேறுகளையும் பெற்று நம்மவருள் (இந்தியருள்) முதன்மையினராகத் தலை சிறந்து விளங்கி வருகின்றார்கள். அவர்களை அத்தகைய பெருமைக்கும், முதன்மைக்கும் உரியவர்களாக்கியது அவர்களது விடா முயற்சியின் பயனால் வளர்ந்த அவர்களது தாய்மொழி (வங்காள

மொழி)யின் இருந்தியபெருக்கமே அன்றிப் பிறிதன்று. இவற்றினும் மேம்பட்ட பயன் உண்டோ? இஃதன்றோ மொழிப்பற்று! இங்ஙனம் முயன்றாலன்றோ எவரும் முன்னேறலாம். இங்ஙனமே, நமது பக்கத்திலிருந்து மிக விரைந்து முன்னேறிவரும் நமது ஆந்திர சகோதரர்களது நன்முயற்சியும், அதனால் அவர்கள் அடைந்துவரும் பெருமையும், ஜப்பான் மிகத்தாழ்ந்த நிலைமையிலிருந்து மிக விரைவில் இவ்வளவு மேலான நிலைமைக்கு வந்த வரலாறும், பிறவும் நம்மனோரால் உய்த்துணரத் தக்கனவாம்.

முடிவுரை.

அறிஞர்களே, அடியேனது புல்லறிவுக்கெட்டிய அளவு ஏதோ சில கூறினேன். இனி, நல்லறிவுள்ள தாங்கள் "ஞாலங் கருதினும் கைகூடும் காலங்-கருதி இடத்தாற் செயின்" என்ற நல்லுரையை நாடி, ஒன்று கூடி, நன்கு ஆராய்ந்து, தக்கது செய்து நமது தாய் மொழியாந் தண்டமிழைக் காலத்திற் கேற்றுவாறு பல துறைகளினும் வளர்த்துப் பெரும் புகழ் பெறுவீர்களாக.

தண்டமிழ் மொழியைத் தரணியில் உயர்த்துவீர்
எழுமின் தமிழர்காள் எழுமின் எழுமின்
உழைமின் உழைமின் ஓயாது உழைமின்
பெறுமின் உயர்நிலை பெறுமின் பெறுமினே.

சுபம்! சுபம்!! சுபம்!!!

தர்மஸ்தாபனங்கள்.

தர்மஸ்தாபனங்களென்பவை, புண்ணிய பூமியாகிய நம் நாட்டில் பண்டைக்காலத்திருந்த அரசர்களும், பிரபுக்களும் தாங்கள் நல்லாற்றில் ஈட்டிய பொருளைக் கொண்டு நன்னோக்கத்துடன் ஸ்தாபிக்கப் பெற்றவைகள். அவை: ஆலயங்கள், மடங்கள், அன்ன சத்திரங்கள், கல்விச் சாலைகள், பரதேசிகளின் வாசஸ்தானங்கள் எனப் பலவகைப்படும். அவற்றுள் சில, மதச் சார்பானவைகள், சில பொது நோக்குடையனவைகள். இவை இங்ஙனம் சிறிது பேதப்பட்டிருப்பினும், பொதுவகையால் நோக்கும்போது, எல்லாமே மதப்பிரசாரத்தின் பொருட்டும், தெய்வழிபாடு குறித்தும், ஏழைகளின் பசிதணித்தற்கும், கல்வி யபிவிருத்திக்குமே மகா புண்ணிய சீலர்களால் அமைக்கப்பட்டனவென்பது நன்கு விளங்கும். இவை என்றும் நிலைபெறற் பொருட்டு அம்மகோபகாரிகள் பற்பல கிராமங்

களையும், நிலங்களையும், வேறு பலதிறப்பட்ட சொத்துக்களையும், சர்வமானியங்களையும் விட்டு எந்த இராஜாங்க மாறுதலிலும் மாறாத விதத்தில் சாசனங்களும் ஏற்படுத்தி வைத்திருக்கின்றார்கள். இவர்கள் ஆதியில் அமைத்த முறைப்படியே இவை, மடாதிபதிகளாலும், தருமகர்த்தாக்களாலும் நடத்தப்பட்டு வருகின்றன. இவற்றுள் சில தேவஸ்தானங்கள், பொது ஜனங்களின் வாக்குரிமையின் மேல் தேர்ந்தெடுக்கப்பட்ட மெம்பர்களின் உயர்ந்த அபிப்பிராயத்தைத் தழுவித் தருமகர்த்தாக்களாலும் காரியஸ்தர்களாலும் நடைபெற்று வருகின்றன. சில மடங்கள், ஆதியில் ஏற்பட்ட மடாதிபதிகளின் சிஷ்ய பரம்பரையில் வழிவழியாகப் பட்டத்துக்கு வருவோரால் சுயாதீனம் பெற்று ஆளப்பட்டு வருகின்றன. மற்ற தர்மஸ்தாபனங்கள் அவற்றிற்குரியாரின் வழிவந்தவரால் நடத்தப்பட்டு வருகின்றன. இவை ஏற்பட்ட காலங்களுக்குப் பின்னர், சிற்சில இராஜாங்க மாறுதல்கள் நிகழ்ந்தும், இவை, அவற்றால் எவ்வகை இடையூறும், மாறுதலுமின்றி நிலைபெற்றிருக்கின்றன. நமது பிரிட்டிஷ் காருண்ய கவர்ன்மெண்டாரும், 'மதவிஷயங்களில் தலையிடுவதில்லை' என்ற தீர்மானத்தின்படி இவற்றின் விஷயங்களிற் பிரவேசித்து எவ்வித மாறுதல்களையும் உண்டாக்காதிருந்து வந்தனர்.

இங்ஙனமிருந்தும், மேஷ்டி தர்மஸ்தாபனங்களை நடத்துவோரால், பிற்பட்ட காலத்தில், அவற்றின் காரியங்களில் பற்பல சீர்கேடுகள் நடக்க ஆரம்பித்தன. வரவர அவை எல்லையின்றி வளர்ந்துவிட்டன. சிற்சிலஸ்தாபனங்கள் ஒழுங்கில் நடை பெற்றாலும், மற்ற பெரும்பான்மையான தர்மஸ்தாபனங்களெல்லாம் அறிஞர் மனம் புழுங்கத்தக்கவிதமாக நடைபெற்று வருகின்றன. அவற்றுள்ளும் மடங்களைப்பற்றியோ ஒன்றும் சொல்லவேண்டியதே யில்லை. மடாதிபதிகளிடம் பொருள்வேளவும் சில சுயநலப்பிரியரை யன்றி மற்றைய அறிவாளிகள் அவ்வாதீனங்களின் நடக்கைகளில் திருப்தியடைவதற் கேதுவில்லை. இவற்றைப்பற்றிப் பல பத்திரிகைக்காரர்களும், பிரசங்க கர்த்தர்களும், மற்றைய மதியாளரும் பன்முறையும் வகை வகையாக விஸ்தரித்து எழுதியும், உரைத்து மிருக்கின்றார்களாதலின், நாம் கூறுதல் மிகையாம்.

தர்மஸ்தாபனங்களில் இவ்வாறு சீர்கேடுகள் மிதமிஞ்சி நிகழவே பொது ஜனங்களுக்குள் அவற்றைப்பற்றி அதிருப்தி அதிகரித்து வந்தது. அதனாலவர்கள் அவற்றைச் சீர்திருத்தும் விஷ

யத்தில் கவலை கொள்வாராயினர்; பல பெரியோர்களிடம் முறையிடலாயினர்; 'கவர்ன்மெண்டாரேனும் இவற்றைக் கவனிக்கமாட்டார்களா' என்று ஏக்கங் கொண்டனர். முன்னர் இவற்றின் சீர்திருத்தத்தைப் பற்றிச் சில பெரியோர்களால் துரைத்தனத்தாரிடம் சில முயற்சிகளும் நடைபெற்றன. ஆனால், அவற்றிற்குத் தக்க கவனிப்பும் பலனும் ஏற்படவில்லை.

இப்படியிருக்க, இப்போது, இவற்றைப் பற்றி நமது சென்னைச் சட்டசபையில், சுயஆட்சி ஸ்தலஸ்தாபன மந்திரியார் ஒரு மசோதா கொண்டுவந்திருக்கிறார். அது, நம்நாட்டிலுள்ள தேவஸ்தானங்கள், மடங்கள், சத்திரங்கள் முதலிய பல தர்மஸ்தாபனங்களின் சொத்துக்கள், எவற்றின் பொருட்டு ஆதி கர்த்தர்களால் வைக்கப்பட்டனவோ அவற்றை அச்சொத்துக்களின் வருமானத்தால் சரிவர நடத்தவும், மீதிவரும்படியைப் பொது ஜனங்களின், கல்வி, சுகாதாரம் முதலியவைகட்குச் செலவிடவும் செய்யும் நோக்கத்தைக் கொண்டதாகும். இம்மசோதாவைச் சட்டசபையில் சிலர் ஆதரித்துப் பேசினர்; சிலர், 'இதற்குப் பொதுஜனங்கள் தங்களுடைய கருத்தை வெளியிடவேண்டாமா? போதிய காலங்கொடுக்கப் படவில்லை' என்று பேசினர். இவ்வாறு சட்டசபையில் விவாதஞ் செய்யப்பட்டு ஷை மசோதா, தனிக் கமிட்டியாரின் பரிசீலனைக்கு வந்திருக்கிறது. இதன் முடிவு என்னுகுமோ நாம் அறியேம்.

முடிவு எங்ஙனமாவதா யிருப்பினும், தர்மஸ்தாபனங்களின் சீர்திருத்த விஷயங்களைப்பற்றி எவரும் கவனிக்கவில்லையே என்று பொது ஜனங்கள் ஏக்கமுற்றிருந்த இக்காலத்தில், இம்மசோதாவொன்று கிளம்பியதைப்பற்றி எல்லோரும் திருப்தி யடையவேண்டியதே. எனினும் இதில் பெரும்பான்மை சாதகமுமுண்டு, சிறுபான்மை பாதகமுமுண்டு. ஆதலின், இந்தச் சாதகபாதகங்களை நம்மவர் கவனித்து, ஷை மசோதாவின் நோக்கங்களில் தள்ளத் தக்கன தள்ளியும், கொள்ளத்தக்கன கொண்டும் தர்மஸ் தாபனசீர்திருத்தத்தை ஒரு நல்லவகையில் அமைக்குமாறு நாமெல்லோரும் முயற்சி யெடுத்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோம்.

இம்மசோதாவின் நோக்கங்களைப் பற்றிப் பற்பலர் பற்பல விதமாகக் கூறுகின்றனர்: தர்மஸ்தாபன போஷகர்களாயும், உத்தியோகஸ்தர்களாயும், தரும கர்த்தாக்களாயும் காரியஸ்தர்களாயும் நெடுங்காலமாகக் கோவில் பெருச்சாளிகளாயிருந்து இரகசியமாகத்

தர்மசொத்துக்களை விழுங்கி ஏப்பமிட்டுவரும் சிலரும், ஆதீனத்தாரிடம் பலவகையிலும் உபகாரம் பெற்று வருவோரும், தர்மஸ்தாபனங்களெல்லாம் சரியாகவே நடைபெற்றுவருகின்றன; அவை எப்பொழுதும் இருந்துவருவது போலவேதான் இருக்கவேண்டும் என்கின்றனர்; இவ்வகுப்பாருள் இன்னும் சிலர், 'தர்மஸ்தாபனங்கள் எப்படி நடைபெற்றபோதிலும் அவற்றில் தனிப்பட்ட பரம்பரையான நிர்வாகத்திலிருப்பவற்றை இந்த மசோதா கட்டுப்படுத்தலாகாது' என்கின்றனர்; சிலர் மதச்சண்டைகளை இடையிற் புகுத்தப் பார்க்கின்றனர்; சிலர், 'மூலபுருஷரது நோக்கத்தை நிறைவேற்றவே துணைபுரியவேண்டும், வேறு எதற்கும் தர்மஸ்தாபன வரும்படிகள் சேர்க்கப்படலாகாது' என்கின்றனர். இன்னும் வெவ்வெறு வகையார் வெவ்வேறுவகைகளாகச் சொல்கின்றனர். இவையெல்லாம் ஒவ்வொருவரின் மனப்போக்கைப் பொறுத்தவைகளாயிருக்கின்றன.

இவ்விஷயத்தில் பாரபக்ஷமின்றி நடுநிலைமையோடு அபிப்பிராயம் சொல்லுதலே தக்கதாம். பொதுவாக நோக்கும்போது தர்மஸ்தாபனங்கள் சீர்கேடடைந்திருக்கின்றன வென்பதை எவரும் மறுக்கமுடியாது. அவை சீர்திருத்தப் படவேண்டியது முக்கியமே. அவற்றைக் கவனிப்பாரில்லாத நிலைமையில் ஆட்சி முறையார் கவனித்தலும் நியாயமே. தர்மஸ்தாபன வரும்படிகளைக் கொண்டு மூலபுருஷர்களின் நோக்கம் பூர்த்தியாகச் செய்வதும் இன்றியமையாததே. ஆனல், அவற்றில் மீதியாகும் தொகையை வேறு பல வகைகளுக்கு உபயோகிப்பது மட்டும் கூடாதவிஷயம். இது பொது ஜனங்களுக்கு அதிருப்தியை உண்டாக்கும். ஷை மசோதாவில் காட்டப்படும் வேறுவகையான கல்வி, சுகாதாரம் முதலியன பொதுஜனோபகார மானவையெனினும், அவைகளும் தர்மஸ்தாபன காரியங்களில் முன்னரே மூலபுருஷர்களால் அமைக்கப் பட்டிருத்தலானும், அவ்வுபகாரங்களை ஜனங்கள் பெற்றுக்கொள்வதற்கு ஷை ஸ்தாபனங்களே எதுவா யிருத்தலானும், அவற்றை வேருக்கிக் கொண்டு எல்லா தர்மஸ்தாபன மீதி வரும்படிகளையும் அவற்றிற்கெனப் பிரத்தியேகமாகச் செலவழித்தல் கூடாமையாயிருக்கின்றது. ஒவ்வொரு தர்மஸ்தாபனமும் ஒவ்வொரு நோக்கத்துடன் அமைக்கப்பட் டிருக்கிறது. மேற்கூறியபடி செய்தால் ஷை நோக்கங்களுக்கு இடை யூறுரும். மேலும் அந்தஸ்தாபனங்களுக்கும் அவற்றை நடத்திவரும் ஆதினத்தார் முதலிய தலைவர்களுக்கும்

சிறப்பில்லாமற் போகும். அந்த அந்த மதஸ்தாபனங்கட்கும் இடை யூறுண்டாகும். மதப்பிரசாரங்கள் குறைந்துபோம். ஒவ்வொரு தேவாலயச் சிறப்பும் குறைந்து விடும். இன்னும் எத்தனையோ குறைகளெல்லாம் நிகழும். இதனால் பொது ஜனங்கள் தர்மஸ்தாபன சீர்திருத்த வகையில் திருப்தியடைவது போய் அதிருப்தி யடைவார்கள். பற்பல வகைப்பட்டு விளங்கும் தர்மஸ்தாபன காரியங்களை யெல்லாம் ஒன்று சேர்த்து ஒருசேர நோக்குவோமாயின் அவற்றில் மதப்பிரசாரம், தேவவழிபாடு, கல்விவிருத்தி, தானதர்மங்கள், சுகாதாரம் எல்லாம் அடங்கியிருப்பது விளங்கும். இதில் ஷெ மசோதாவிற் காட்டப்பட்ட வேறு விஷயங்களும் தாமே அடங்கும்.

ஆதலின், தர்மஸ்தாபனங்களை, மூல புருஷர்களின் நோக்கத்தைப் பூர்த்திசெய்யும் விதத்தில்மட்டும் செவ்வனேநடைபெறு மாறு செய்துவிட்டால் அவற்றினடியாக ஷெ மசோதாவிற் குறிப்பிட்ட இதர விஷயங்களும் தாமே நடைபெறும். அவற்றை எங்ஙனம் சீர்திருத்த வேண்டுமெனில், அவற்றை நடத்துவோரைச் சரியான விதத்தில் நடக்கச் செய்யவேண்டும். பொது ஜனங்களின் வாக்குரிமையின் மேல் அத்தலைவர்களில் ஒழுங்கீனமானவர்களை நீக்கவும், சீலமுள்ளாரை அந்தஸ்தானத்திற்குத் தேர்ந்தெடுக்கவும் ஏற்பாடுகள் செய்யப்படவேண்டும். ஒவ்வொரு ஸ்தாபனத்திற்கும் நற்குண முள்ள பலர் சேர்ந்த கமிட்டியொன் றிருக்கவேண்டும். அவர்களுள் அதிகப்பட்டவர்களுடைய அபிப்பிராயங்களைத் தழுவியே தரும காரியங்களை அவற்றின் தலைவர்கள் நடத்தவேண்டும். தர்மஸ்தாபனங்களின் கணக்குகள் அக் கமிட்டியாரால் கவனிக்கப் படவேண்டும். கவர்ன்மெண்டாருடைய பார்வையும் அவற்றில் சிற்சில சமயங்களில் இருத்தல் வேண்டும். தரும சொத்துக்கள் வீண் வழிகளிலும், சில துர்க்காரியங்களிலும், வம்பு வழக்குகளிலும் செலவழிக்கப் படாமல் மூல புருஷர்களின் நோக்கங்களில் மாத்திரம் செலவிடத்தக்க ஏற்பாடுகள் செய்யப்படவேண்டும். மீதிப்பணங்களை அந்த அந்த ஸ்தாபனங்கட்கே மூலதனமாகச் சேர்த்து வரவேண்டும். பொது நோக்கத்துடன் செய்யத்தக்க காரியங்கள் இவைகளேயாம். நம்மவர்கள் இவற்றில் சிரத்தையின்றி யிருந்ததனாலேயே தர்மஸ்தாபனங்கள் ஒழுங்கீனப்பட்டு, 'மத விஷயங்களில் தலையிடமாட்டோம்' என்ற மகாராணியாரின் வாக்குக்கும் மாற்றமாகக் கவர்ன்மெண்டாரும் இவற்றில் தலையிடக் காலம் நேர்ந்தது நம்

மவர்க்கு ஒரு வெட்கமான காரியமேயாம். ஆதலின், இம்மசோதா வின் தீமானங்களில் தகுதியானவற்றைச் செய்ய நம்மவர் தக்கமுயற்சி யெடுத்துக் கொள்ளுமாறு எல்லாம் வல்ல இறைவன் திருவருள் புரிவானாக. தருமன்.

ரயில்வே 3-வது வகுப்புப்பிரயாணிகளின் நரகவாதனை.

நம்நாட்டு ரயில் வண்டிகளில் பிரயாணஞ் செய்வோரில் மூன்றாவது வகுப்புப் பிரயாணிகள் படும்பாடு பிரத்தியக்ஷ நரகவாதனை யென்றே சொல்லலாம். இந்த வாதனையைப்பற்றி எவரும் கவனிப்பதே கிடையாது. இக்காலத்தில் இலௌகிக தர்மங்கள் கணக்கின்றிப் பெருகியிருப்பதால், ஒவ்வொரு நாளிலும் ஜனங்களுக்குப் பிரயாணம் அதிகமாகி விடுகிறது. அதனால் ஒவ்வொரு வண்டிக்கும் பிரயாணிகள் பல்லாயிரக் கணக்காக ஒவ்வொரு ஸ்டேஷனிலும் நிறைந்து விடுகின்றார்கள். வண்டி புறப்படுவதற்கு அரை மணி நேரத்துக்கு முன் டிக்கட் கொடுக்கவேண்டுமென்று ரயில்வே சட்டமிருந்த போதிலும் டிக்கட் விற்போர் ஐந்து நிமிஷமிருக்கும்போது தான் டிக்கட் கொடுக்க ஆரம்பிக்கிறார்கள். அதனால் வண்டி போய் விடுமே என்ற பய மேற்பட்டு ஜனங்கள் அவசரமாக ஒருவர் மேலொருவர் வீழ்ந்து எமவாதனையான இடுக்கு வழியிற் புகுந்து ஜன்னலில் ரூபாயுடன் பல கைகளை நுழையவிட்டு மீதிச்சில்லரை வாங்கியும் வாங்காமலும் டிக்கட்டுகளில் சிலவற்றை நழுவவிட்டும் அவஸ்தைப்பட்டுத் துணி கிழிந்து தலைவிரி கோலமாய் வேர்வை யொழுக எமலோகத்திலிருந்து வெளிப்படுவதுபோல் வெளி யேறுகிறார்கள். இன்னும் டிக்கட் வாங்குமிடத்தில் நடக்கும் இக்கட்டுகள் பல. இவ்வளவு துன்பப்பட்டு உள்ளே நுழைவதற்குக் கேட்டோரம் போனாலோ அங்கே நிற்கும் புலிகள் சீறி, எடை போடத்தகாத மூட்டைகளை எடை போடவேண்டுமென்றும், சார்ஜ் வாங்கத்தகாத குழந்தைகளுக்கு வாங்கவேண்டுமென்றும் அவஸ்தைப் படுத்துகின்றன. இவற்றிற்கெல்லாம் வகை சொல்லிவிட்டு உள்ளேசென்று வண்டியிலேறப் போனாலோ அங்கே நம்மவர்களே ஒற்றுமைக் குறையால் முன்னே யேறியிருப்பவர்கள் பின்னே வருபவர்களைக் கழுத்தைப் பிடித்துக் கீழேதள்ளி விடுகின்றனர். இதனால் பல ஜனங்கள், வழிகளிலும் வாயிற் படிகளிலும் மூட்டை

முடிச்சுக்களைப் போட்டுக்கொண்டு நின்றபடியே நிறைந்து விடுகிறார்கள். ஒரு பெட்டிக்கு எட்டுப்பேர் இருக்கவேண்டுமென்று சட்ட மிருந்தாலும் வாயாடிகளும் வம்புக்காரர்களும் சௌக்கியமாயிருந்து கொள்ளுகிறார்கள். மற்றவர் பரிதபிக்கின்றார்கள். இவ்வித் உபத்திரவங்களால் ஒரு கூட்டத்தாரில் சில பேர் வண்டியில் ஏறிக் கொள்ளுகிறார்கள். சிலர் ஏற முடியாமல் நின்று கதறுகிறார்கள். ஜனங்கள் இவ்வாறு என்ன பாடுபட்ட போதிலும் கவனிக்காமல் ரயில்வே வேலைக்காரர் பெல்லடித்ததும் வண்டியை நடத்தி விடுகிறார்கள். வண்டி போகும்போது குழந்தை வண்டியிலிருந்து கதறுகிறது; தாய் கீழே நின்று கதறுகிறாள். இவ்வாறு கதறும்போது மாயவரம் ஸ்டேஷனில் சிலபேர் மனதிரங்கி வண்டி போய்க்கொண்டிருக்கும்போது தாயைத் தூக்கிச் சன்னல் வழியே வண்டிக்குட் செலுத்தினர்; உள்ளேயிருந்த சிலர் அவளை வாங்கினார்கள். இதைக் கண்ட ரயில்வே வேலைக்காரர் ஒருவர் ஓடிவந்து இது ரூலுக்கு விரோதமென்று வெகு தயாளமாய் அவளைப் பிடித்திழுத்துக் கீழே தள்ளி விட்டார். இவருடைய கல்மனம் எங்ஙனம் அமைந்ததோ.

இன்னும் ஜனங்கள் மூச்சுவிட இடமில்லாமல் வண்டியில் எங்கும் புளி மூட்டைகளைப்போல அடைந்து விடுவதால் பலபேர் கக்குஸ்வாசலிலும் மூக்கைப் பிடித்துக்கொண்டு உட்கார்ந்திருக்கிறார்கள். ஒவ்வொரு ஸ்டேஷனில் ஜன நெருக்கத்தால் மனிதர் வண்டியில் ஏறவும் முடியாமல் இறங்கவும் முடியாமல் உண்டாகும் உபத்திரவங்கட்கு அளவில்லை. மல ஜல பாதைக்கும் ஒதுங்க முடியாமல் சில ஸ்திரீகளும், விருத்தாப்பியர்களும் படும்பாடு கடவுளுக்குத் தான் தெரியும். சிலர், தாங்கமுடியாமல் இருந்த விடத்திலேயே ஜலஸ்பரிஸம் செய்து விடுகிறார்களென்றால் வேறென்ன தான் இதைப்பற்றிச் சொல்லவேண்டும். சிலர் ஏறினதிலிருந்து இறங்கும்வரை நின்றபடியே செல்கின்றனர். சிலர், ஜன நெருக்கத்தால் மூட்டை முடிச்சுக்களைச் சோரர் அபகரிக்க, வயிற்றி லடித்துக் கொண்டு விழுந்து புலம்புகின்றார்கள். இவ்வளவு அவஸ்தைகளுக்கிடையில் டிக்கட் பரிசோதகரும், மற்றையரும், போலீஸ் புண்ணியாத்மாக்களும் வந்து புகுந்து செய்யும் உபத்திரவங்களோ எண்ணத் தொலையா. இவர்கள், ஜனங்களின் அவஸ்தை நீங்குவதற்கான மார்க்கங்களைக் கவனிக்காமல் மேலும் உபத்திரவங்களைச் செய்யத் தொடங்குவது தான் வேடிக்கை. இன்னும் ஒரு செய்கை மிக விநோதமானது. சில சிறிய ஸ்டேஷன்களில் நள்ளிரவில் ஜனங்

கள் இரங்கிப்பக்கத்து ஊர்களுக்குப் போகப்பயந்து விடிந்த பின் போகலாமென்று ஸ்டேஷனிலேயே படுத்துக்கொண்டால், அங்குள்ள போலீஸ்காரர்களும், போட்டர்களும் வந்து, "இங்கே ஒருவரும் படுக்கக்கூடாது; எழுந்துபோய் விடுங்கள்; மூட்டை முடிச்சுக்கள் திருட்டுப்போய் விட்டால் நாங்களல்லவா ஜவாப் சொல்லித் தீரவேண்டும்; அதற்கு யார் இழவு கூட்டுகிறது; போங்கள் போங்கள்" என்று அவர்களைத் துரத்துகிறார்கள். இந்தச் சங்கடத்திற்குப் பயந்து அவர்கள் ஸ்டேஷனை விட்டுக்கொஞ்சத்தூரம் போகவே வழியில் சில திருடர் நின்று அவர்களுடைய மூட்டைகளைப் பிடுங்கிக்கொண்டு ஓடுகிறார்கள். ஜனங்கள் கதறுகிறார்கள். இதை என்னவென்று சொல்லுகிறது. ரயில்வே கட்டண மாத்திரம் ஏறிக்கொண்டே போகிறது.

இன்னும் ரயில்வே உபத்திரவங்களைப் பற்றிக் கூறுவதென்றால் அதுவே ஒரு பெரிய பாரத புத்தகமாகும். அவற்றை யெல்லாம் ஒரு நாடகமாகவும் எழுதலாம். இவ்வளவு அக்கிரமங்கள் நடந்தும் எவரும் அவற்றைக் கவனிப்பதே கிடையாது. இவற்றைப் பற்றிப் பொது ஜனங்கள் எழுதும் விண்ணப்பங்கள் தினந்தோறும் நூற்றுக்கணக்காக ரெயில்வே அதிகாரியின் ஆபீஸில் போய்க் குவிகின்றன. எனினும் அவைகள் குப்பையில் போடப்படுகின்றனவேயன்றிக் கவனிக்கப்படுதில்லை.

இந்நிலையில சிலவாரங்களுக்கு முன் சென்னையில் ,ரெயில்வேப் பிரயாணிகளின் மகாநாடு' ஒன்று நடைபெற்றது. அதில் வரவேற்புக் கமிட்டித்தலைவர் ஸ்ரீமான். கிரிதரதாஸ் நாராயணதாஸ் அவர்களும், மகாநாட்டுத் தலைவர் ஸ்ரீமான் திவான்பகதூர் கேசவப்பிள்ளை அவர்களும், ரயில்வே, ஏழை இந்தியர்கட்கு நன்மையைச் செய்வதில்லையென்றும், அதிலும் மூன்றாவது வகுப்புப் பிரயாணிகள் படும்பாடு சகிக்கமுடியாததா யிருக்கிறதென்றும், இத்தகைய தொல்லை விரைவில் நீக்கப் படவேண்டுமென்றும், வெகு உருக்கமாகப் பேசினார்கள். மகாநாட்டுத் தலைவர், பல வருஷங்களாக இதைப் பற்றிக் கவனித்துத் துரைத்தனத்தாருடைய அறிவிப்புக்குக் கொண்டுவந்திருப்பதாகவும் கூறினார். இவ்வகைப்பேச்சு எல்லோரும் திருப்தியடையக் கூடியதே. எனினும், இது பேச்சளவாகமட்டும் நின்றுவிடக் கூடாது. கூடியவரை முயற்சிசெய்து ரயில்வே நாகவாதனை நீங்கத்தக்க ஏற்பாடுகளை விரைவில் செய்யவேண்டும்.

வண்டிகளில் ஏற்பட்ட அளவின்படி ஜனங்கள் நிரவியிருக்கவும், இடமிருக்கும் வரையிலுமே டிக்கட்டுகள் கொடுக்கவும், ஜனக்கூட்டத்திற்குத் தக்கபடி வண்டிகளை அதிகப்படுத்தவும், அதிக சார்ஜைச் சற்று குறைக்கவும், ஜனங்கள் இடைஞ்சலின்றி டிக்கட்டுகளை வாங்கிக் கொள்ளவும், ஜனங்கள் வண்டியில் ஒற்றுமையின்றிச் செய்து கொள்ளும் கலகங்களை ரயில்வே உத்தியோகஸ்தர் கவனித்துத் தடுக்கவும், இன்னும் மற்ற குறைகளையெல்லாம் நீக்கவும் தக்க முயற்சிகளை அவசியம் செய்தல் வேண்டும். இது பெரும்புண்ணியச் செயலாகும்.

ஓர் கஷ்டப்பிரயாணி.

தருமோபதேசம்.

(முன்தொடர்ச்சி பக்கம்-216.)

எண்சீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

ஒன்றெய்தி நாறிழக்குஞ் சூதி னாலே
உள்ளபொரு ளெல்லாம்போய் வறுமை சேர்ந்து
கன்றிமனங் கலங்கிடுதற் கேது வாகும்
கண்டவரெல் லாம்பழித்தற் கிடமு முண்டாம்
சென்றதனை நினைந்துமிக வேக்கங் கொண்டு
தெளிவின்றித் திரிவதனால் தீரா நோயாம்
இன்றுபோய் நாளைவரு மென்றே யொன்றை
எண்ணியெண்ணித் தயங்குவதால் இழிவுண்டாமே. (அஅ)

இருவர்மன மொருமித்து நேயங் கொண்டே
இசைந்தொருவ ருக்கொருவர் துணையே செய்து
வருவதுகண் டுவக்காமற் பொறாமை கொண்டே
வாய்ந்தவவர் நட்பதனைப் பிரிக்க வெண்ணிப்
பெருமைமிகு நற்குணங்கள் சிறிது மின்றிப்
பேச்சினால் மித்திரபே தங்கள் சொல்லும்
கரும்முள்ள பாவியர்க்கு வாழ்வு கெட்டுக்
கவலையென்றும் விலகாமற் சூழுந் தானே. (அகூ)

செருப்பாலே யடித்துப்பின் குதிரை தன்னைக்
கேண்மையுடன் கொடைகொடுத்த கதையைப் போல
விருப்பாலே வந்தவர்க்கோர் தீங்கி டாமல்
வெறுப்பாகப் பேசிப்பின் மேன்மை யுற்ற
தருப்போலே வேண்டுவன கொடுத்திட் டாலும்
சாந்தமொழி பலபலவாப் பேசினாலும்
இருப்பாணி பாய்ந்தபுண்போல் மனது வெந்திங்
கெரிவதன்றிக் குளிர்ச்சியொன்று மெய்தி டாதே. (கூ0)

செம்பையார்.

21046

தகவுரை.

இந்திய விவசாயம்:—

இஃதோர் மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை. இகன்மலர் இரண்டின் இதழ் 8 முதல் 12-வரை வரப்பெற்றோம். இதில், பலவகை நன்செய் புன்செய்ப் பயிர்கள், செடி கொடிகள், முதலியவற்றை இலகுவில் பயிர்செய்து அதிகப்பலனை அடையும்படியான மார்க்கங்களெல்லாம் விரிவாகவும் விளக்கமாகவும் கூறப்படுகின்றன. இதன் முறைகளின்படி விவசாயம் நடத்தினல் நம்நாட்டினர் மிக்க ஐசுவரிய முடையவர்களாய்த் திகழுவார்களென்பது திண்ணம். எல்லாத் தொழில்களினும் விவசாயமானது ஜீவாதாரமாயிருந்தும் அதனை நம் நாட்டவர் பெரும்பான்மையும் கைவிட்டிருக்கும் இக்காலத்தில் அத்தொழிலை விருத்திக்குக் கொண்டுவருவதற்கு இப்பத்திரிகை மிகவும் துணைபுரியத் தக்கது. ஒவ்வொரு தமிழ் நாட்டு இந்தியரும் படிக்கத்தக்கது. வருடசந்தா உள்நாட்டிற்கு ரூ 1-4-0, புறநாடுகட்கு ரூ 1-8-0. இதனை விரும்புவோர் "மானேஜர், இந்திய விவசாயம் ஆபீஸ், தெப்பக்குளம் போஸ்டு, திருச்சினப்பள்ளி" என்ற விலாசத்திற் கெழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

பெற்றோரும் பிள்ளைகளும்:—

இது, மக்கட்குப் புத்தி புகட்டத்தக்க அரிய வோர்புத்தகம். பண்டிட் M. M. நாராயணசாமி ஐயரவர்களால் இயற்றப் பெற்றது. துரைத்தனத்தாரால் அங்கீகரிக்கப் பெற்றது. இதில், பெற்றோர், பிள்ளைகளிடத்தில் நடந்து கொள்ளவேண்டிய கிரமங்களும், அவரவர்க்குச் செய்யவேண்டிய கடமைகளும், பிள்ளைகள், தாய் தந்தையர்களிடத்தில் நடந்து கொள்ளவேண்டிய முறைமைகளும் பற்பல பண்டைச்சரித வுதாரணச் செய்யுட்களுடனும், மேற்கோள்களுடனும் தெளிவாக எழுதப்பட்டிருக்கின்றன. இது, பெரிய நீதிகளைப் போதிக்கத் தக்கதெனினும் பிள்ளைகள் எளிதிற் படித்தற்கனுகூலமாகச் சிறிய புத்தக ரூபமாக அமைந்தது. பாடசாலை மாணவர்க்கின்றி யமையாதது. இதன்விலை அணு-1. வேண்டுவோர், "M. M. நநாராயணசாமி ஐயர், முடிகொண்டான் போஸ்டு, நன்னிலம் வழி" என்ற விலாசத்திற் கெழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

சுகாதார போதினி.

இது, ஒருமாதாந்தத் தமிழ்ச் சஞ்சிகை; இதில் சுகாதாரம், வைத்தியம், மெஸ்மரிஸம், ஹிப்னடிஸம், கைத்தொழில் முதலிய விஷயங்கள் பிரசுரிக்கப்படும்.

வருஷசந்தா ரூபா ஒன்றுதான். மாதிரிக்காப்பி இனமாக அனுப்பப்படும்.

விலாசம்:—சுகாதார போதினி ஆபீஸ்,
12, அப்புமேஸ்திரி தெரு, ஜி, டி, மதராஸ்.

தருமசீலன் பிரஸ் விளம்பரம்.

நமது தருமசீலன் அச்சுக்கூடத்தில் தமிழிலும், இங்கிலீஷிலும், சகாயமான சார்ஜில் அச்சுவேலைகள் வெகு சுத்தமாகச்செய்து கொடுக்கப்படும். வெளியூரிலிருந்து, நம் ஆபீஸில் அச்சுவேலைகள் செய்துகொள்ளப் பிரியமுள்ளவர்கள், அச்சிடவேண்டிய காப்பிகளை நமக்கனுப்பி, பாரம் ஒன்றுக்கு ஒருரூபா விகிதம் புரூப் சார்ஜும் கொடுத்தால் அவ்வேலைகளை நாமே புரூப்பார்த்து முடித்துக்கொடுப்போம்.

மானேஜர்,
தருமசீலன் பிரஸ்,
1/2 பாலகிருஷ்ணன் சந்து,
ஆச்சாரப்பன் தெரு, ஜி. டி. சென்னை.

இனம்! “கிலாபத்” இனம்!! இனம்!!

இஸ்லாம் மார்க்க உண்மைகளையும் ராஜீய தேசிய விஷயங்களையும் தன்னுட்கொண்டு, ராயல் 8-பக்கங்கொண்ட பெரிய ஸைஸில் ஒவ்வொரு சஞ்சிகையும் 48-பக்கங்களுடன் நல்ல உயர்தர கிளேஸ் காகிதத்தில் மிக நேர்த்தியாகச் செந்தமிழில் அச்சிடப்பட்டு ஒவ்வொரு மாதம் முதல் தேதியிலும் வெளியாகும் “தாருல் இஸ்லாம்” என்னும் மாதப் பத்திரிகைக்கு 1923-ல் சந்தாதாரராகச்சேரும் ஒவ்வொரு புதிய நண்பருக்கும் ஒவ்வொரு கிலாபத் புத்தகம் இனமாகக் கொடுக்கப்படும். கொஞ்சம் பிரதிகளேயிருக்கின்றன. முந்துங்கள்! முந்துங்கள்.

வருஷ சந்தா ரூ 3-0-0. அயல்நாடுகளுக்கு ரூ 4-0-0.

“தத்துவ இஸ்லாம்” நான்காம் கமலம் 480-பக்கங்கொண்ட பைண்டு புத்தகம் விலை ரூ. 3—0—0.

“தாருல் இஸ்லாம்” ஆபீஸ்,
நாச்சியார்கோவில், (தஞ்சை ஜில்லா.)

சுகானந்த

அயத்தங்க திராவகம்.

அனுபவமானது ! பிரசித்தி பெற்றது!! சஞ்சீவி போன்றது !!!

இதன் முக்கிய குணங்களாவன:--

மித்திரர்களே! இந்த அபூர்வ மருந்தானது அநேக கொடிய வியாதிகளை ஆச்சரியமாய்க் கண்டிக்கக்கூடியது, இதை அநேக ஆயிரக் கணக்கான ஜனங்கள் உபயோகித்துச் சந்தோஷிக்கின்றனர். வியாதியினுலாவது கெட்ட சகவாசத்தினுலாவது இளைத்துப் போயிருக்கும் தேகத்தைப் புஷ்டியாக்கி பலவிருத்தி தருவதில் இது நிகரற்ற மருந்தாகும். ஆங்கிலேய முறைப்படி தயாரிக்கப்பட்ட அருமையான மருந்து. சாப்பிடுவதற்கு மிக இன்பமாயிருக்கும். இருமல் நோய் கண்டு அவஸ்தைப் படுபவர்கள் இதை உட்கொண்டால் இரண்டே வேளையில் ஆச்சரியமான சுகத்தை யடைவார்கள். இதனுல் தீரக்கூடிய வியாதிகள் அநேகம். குணங்கள் பலவாம்.

நீர் வியாதிகள் தீரும். கண்ணெரிச்சல் கை கால் காந்தல் இவை தீரும். முகவசீகரம் உண்டாகும். இது தேக அசதியையோட்டும். ஜீரண சக்தியையும் நல்லபசியையும் உண்டாக்கும். மனதை அதிக உற்சாகப்படுத்தும். நரம்புகளுக்கு அதிக வலுவைத் தரும். தேகத்தில் நல்ல இரத்தத்தைச் சுரப்பிக்கும். க்ஷய ரோகத்தை க்ஷணத்தில் தீர்க்கும். வாதபித்த சிலேத்துமங்களா லுண்டாகும் ரோகங்களை நிவர்த்திக்கும். சத்த தாதுக்களுக்கும் நல்ல பலத்தைத் தரும். மூலச்சூடு மூலவாய்வு மலச்சிக்கல் இவற்றைத் தீர்க்கும்.

இந்தச் சஞ்சீவியை நல்ல போஜனத்துடன் 15-நாள் சாப்பிட்டால் இது, இணையில்லாத ஆனந்தத்தைத்தரும். இழந்துபோன தேக திடத்தைப் பழையபடி யடைவதற்கு இதைவிட வேறுமருந்தே கிடையாது. 40-நாள் மருந்து உட்கொள்ளும் பக்ஷத்தில் வியாதி என்பதே அம்மனிதனின் நிழலைக்கூட அணுகாது. தேகம் வஜ்ஜிரமே யாகும்: இதற்கு யாதொரு பத்தியமும் கிடையாது.

20-நாள் மருந்து ரூ. 1 0 0 40-நாள் மருந்து ரூ. 1 12 0

சுகானந்த வைத்தியசாலை
26, ஆச்சாரப்பன் தெரு, ஜி. டி. சென்னை.